தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043 - ஐப்பசி 16

2012 நவம்பர் 1, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

குடிமக்களை அன்புடன் நன்கு பாதுகாத்து நீதிநெறி தவறாது நல்லாட்சி செய்யும் அரசருடைய அடிகளைப் பொருந்தி உலகம் நடக்கும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

சொந்தக் கட்டடம்

***14664—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலுள்ள மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேலூர் நகர்ப் பகுதிக்கான மின் வாரிய அலுவலகம் மின் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகரில் இயங்கிவரும் மின் வாரிய அலுவலகம் மிக நெரிசலான இடத்திலே, கடைகள் அதிகமாக இருக்கின்ற பகுதியில், வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றது. அந்தப் பகுதிக்கு பொதுமக்கள் வந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக இருக்கிற காரணத்தினால், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்ற மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் தனியாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் இப்பொழுது நான் சொன்னேன். நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேலூர் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம், நிதிநிலைமை படிப்படியாக சீரடைந்தவுடன், மிக விரைவிலே சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இப்போது மேலூர் நகரிலே, உதவி செயற்பொறியாளர் அலுவலகம் வடக்கு, மேலூர் தெற்கு, மேலூர் டவுன் மற்றும் கிழக்கு ஆகிய 4 அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அந்த நான்கு கட்டடங்களுக்கும் இப்பொழுது மாத வாடகை ரூ.14,600/- கொடுக்கப்பட்டு வருகிறது. சொந்தக் கட்டடம் கட்டினால் அந்த வாடகை கொடுப்பது அரசுக்கு மிச்சமாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின்

நியாயமான கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக, தாயுள்ளத்தோடு பரிவுடன் பரிசீலித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உறுதியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, மின்சார வாரியத்தில் உதவிப் பொறியாளர் அலுவலகம், செயற்பொறியாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இருந்தாலும்கூட, உதவிப் பொறியாளர் அலுவலகம் மேற்கும், உதவிப் பொறியாளர் அலுவலகம் தெற்கும் இன்றைக்குச் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்கள்கூட 12,600 சதுர அடியிலே, 29 செண்ட் நிலப்பரப்பிலே இருந்தாலும் கூட, அதுவும் 8,000 சதுர அடியிலே அந்தக் கட்டடம் இருந்தாலும்கூட, அந்தக் கட்டடம் 40 ஆண்டுகளாக பாழடைந்த நிலையிலே இருப்பதால், சொந்தக் கட்டடத்திலே இருக்கின்ற உதவிப் பொறியாளர் அலுவலகம் மேற்கு மற்றும் தெற்கு இந்த அலுவலகங்களையும் சேர்த்து அங்கே அனைத்து அலுவலகங்களும் ஒரே இடத்திலே இடம் பெறுகின்ற வகையிலே, அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலூர் நகரில் மொத்தம் 5 அலுவலகங்களும் ஒரே கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அதற்குக் காரணம் A.D. அலுவலகம் தெற்கு, A.D. அலுவலகம் வடக்கு, A.D. நகர், A.D. அலுவலகம் கிழக்கு உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்களும் ஒரே கட்டடத்தில் இயங்கி வருகின்ற காரணத்தால், மின் வாரிய அலுவலகத்திற்குப் பல்வேறு கிராமங்களிலிருந்து வருகின்ற விவசாயப் பெருமக்கள் எல்லாம் வண்டி நிறுத்தக்கூட இடமில்லாத காரணத்தினால் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக, கொட்டாம்பட்டி பகுதியில் இருக்கின்ற A.D. அலுவலகமும் இந்தக் கட்டடத்திலேயே

செயல்பட்டு வருகிறது. ஆகையால், கொட்டாம்பட்டி ஒன்றியப் பகுதிக்குட்பட்ட பகுதியில் A.D. அலுவலகத்தைக் கட்டினால், அந்தப் பகுதி விவசாயிகளும், பொதுமக்களும் வந்து செல்வதற்கு வசதியாக இருக்கும். ஆகையால், 5 அலுவலகங்களும் ஒரே கட்டடத்திலே இயங்கி வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனித் தனியாக அந்த அந்தப் பகுதிகளுக்கென்று பிரித்து, தனியே கட்டடம் கட்டித்தர முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அலுவலகங்களையும் ஒரே இடத்திலே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதிலே கொட்டாம்பட்டி பகுதிக்கு அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படுகின்ற வகையிலே A.D. அலுவலகத்தை தனியாகப் பிரித்து, மக்கள் பயன்படுத்துகின்ற வகையிலே தனியாகப் பிரித்து கட்டடம் கட்டித்தரப்படுமா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து, நிதிநிலைக்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்திலுள்ள உதவி செயற் பொறியாளர் அலுவலகம் இதுவரை 8 இடங்களில் மாறி மாறி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே மின் கட்டணம் செலுத்தக்கூடியவர்கள் சுமார் 20 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அங்கே வந்து நிற்பதற்குக்கூட போதிய வசதி இல்லாத காரணத்தினாலே, அந்த மின் வாரிய அலுவலகத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2012 நவம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் மட்டுமல்ல; எங்கெங்கெல்லாம் மின்சார வாரிய அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ, அந்த இடங்களில் எல்லாம், மின் வாரியத்திற்குச் சொந்தமான இடத்திலே, அதற்காகச் சொந்தக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில், மின் வாரியத்தினுடைய நிதி நிலைமை சீரடையச் சீரடைய, நிதி நிலைமைக்கேற்ப, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து மின் வாரிய அலுவலகங்களுக்கும், சொந்தக் கட்டடங்கள் படிப்படியாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

பரிசோதனைக் கூடம்

***3948—திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதியில் மண்டல குடிநீர் தரப் பரிசோதனைக் கூடம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*